முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் முற்பகல் 10–25 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

தார்ச் சாலை அமைத்தல்

***35434—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(*அ*) *மேட்டுப்பாளையம் தொகுதி, நெல்லித்துறை ஊராட்சி, விளாமரத்தூர் முதல் பில்லூர் அணை வரையிலான வனச் சாலையை தார்ச்சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(*ஆ*) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, நெல்லித்துறை ஊராட்சி, விளாமரத்தூர் முதல் பில்லூர் அணை வரையிலான வனச் சாலையானது, கோயம்புத்தூர் வனக் கோட்டம், மேட்டுப்பாளையம் வனத் துறைக்குட்பட்ட சுண்டப்பட்டி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று மேட்டுப்பாளையம் தொகுதி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இச்சாலைக்கு காப்புக்காடு அறிவிக்கையில் right of way ஏதும் அனுமதிக்கப்படவில்லை. இதனால் இதுவரை தார்ச் சாலை அமைக்கப்படாமல் இருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள வனச் சாலைக்கு உரிய அனுமதியினை விரைவில் வழங்க, அதற்குரிய கருத்துருவைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் நம் அனைவருடைய இதயங்களில் இதய தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்குவதே எனது கடமை என்ற நிலைமையில், இன்றைக்கு சட்டம்–ஒழுங்கு நாட்டில் சிறந்து, செயல்திறன் மிக்க மாநிலம் என்ற நிலைமையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக தமிழகத்தை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற குடிமராமத்து நாயகன் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி இருக்கின்ற ஒரு மலைப் பகுதி. இந்தப் பகுதியில்தான் பில்லூர் அணை அமைந்துள்ளது. இது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற, ஏறத்தாழ 40–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கிறது. மேட்டுப்பாளையம் நகரத்திலிருந்து பில்லூர் அணைக்கு செல்வதற்கு இன்றைக்கு சாலை வசதியும் உள்ளது, பேருந்து வசதியும் உள்ளது. இருந்தாலும் அங்கு செல்வதற்கு 70 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதேநேரத்தில் மாற்று வழியாக மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூருக்கு விளாமரத்தூர் வழியாகச் செல்ல வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் தூரம் பயணித்தால், எளிதாக அந்தப் பகுதிக்குச் சென்றுவிடலாம். அதைக் கருத்தில்கொண்டுதான் கடந்த

காலத்தில், மேட்டுப்பாளையத்திலிருந்து விளாமரத்தூர் வரை இருக்கிற 6 கிலோ மீட்டர் சாலை, தார்ச் சாலையாக மாற்றப்பட்டு இன்றைக்கு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், விளாமரத்தூரிலிருந்து பில்லூர் அணை வரை இருக்கிற 8 கிலோ மீட்டர் சாலை, வனத் துறைக்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தினாலே அந்தச் சாலையை இன்றுவரை செப்பனிட முடியாமல் இருக்கிறது. கடந்த காலத்திலிருந்து இதுநாள் வரையில் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை, அந்தச் சாலையை தார்ச் சாலையாக மாற்றிக் கொடுத்தால், அந்தப் பகுதியிலிருக்கிற 40–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களுக்குச் செல்வதற்கு எளிதாக இருக்கும் என்பதுதான். அக்கோரிக்கையை ஏற்று, கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பே, கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக அதற்கான திட்டப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதற்குண்டான நிதியான ஏறத்தாழ 6½ கோடி ரூபாய் பெறப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய வனத் துறை அமைச்சகத்திற்கு அனுமதி கோரி தாக்கீது அனுப்பியும், அதற்குண்டான அனுமதி இதுநாள் வரையில் வழங்கப்படவில்லை. அனுமதி வழங்கப்படாத காரணத்தினால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக வழங்கப்பட்ட 6½ கோடி ரூபாய் நிதியும் திரும்பப் பெறப்பட்டது. இந்த நிலையில், மத்திய வனத் துறை அமைச்சகத்திடமிருந்து வரப்பெறாத அனுமதியை, மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து பெற்று, அந்தச் சாலையை வனத் துறையின் மூலமாகவோ அல்லது மீண்டும் கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாகவோ, திரும்பப் பெறப்பட்ட நிதியை வழங்குகிற வகையில் ஏற்பாடு செய்து, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விளாமரத்தூர் முதல் பில்லூர் அணை வரையிலான 8.4 கி.மீ. நீளமும், 3 கி.மீ. அகலமும் கொண்ட சாலையை அமைப்பதற்கான

கருத்துரு நான்கு வருடங்களுக்கு முன்பே மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இன்னும் அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு அந்தத் தகவல் இன்னும் வரப்பெறவில்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறிப்பை எடுத்துப் பார்த்து, அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்படும். அந்தப் பணி, ஏதாவது ஒரு காரணத்திற்காகத்தான் மத்திய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். அதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இருப்பினும், பயனீட்டாளர் துறையான DRDA–ன் இணையதளத்தில் கருத்துருவை மறுபடியும் பதிவேற்றம் செய்யும்பட்சத்தில், வனத் துறை துரிதமாகச் செயல்பட்டு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத் தரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இதற்கான நிதியை DRDA–விருந்து பெற வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது உங்களுக்கும் தெரியும். தற்போதுதான் சிறந்த உள்ளாட்சித் துறை நிருவாகத்திற்கான விருது உள்ளிட்ட மத்திய அரசின் 14 விருதுகளை தமிழ்நாடு அரசின் சார்பில் அவர் பெற்று வந்திருக்கிறார் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வனச் சாலைகளை அமைக்கவும், வனச் சாலைகளைப் பராமரிக்கவும் தொடர்ந்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 576.97 கி.மீ. நீளமுள்ள பழுதடைந்த வனச் சாலைகளை உடனடியாகச் சீரமைக்க ரூ.57.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பணியையும் விரைவுபடுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிதியொதுக்கீடு பெறுவதற்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வழங்கிய நிதியை மறுபடியும் பெறுவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றிட விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, அந்த மலைப் பகுதியில், ஓபனாரியிலிருந்து அணைக்கடவு வழியாக மூணுமுட்டத்திற்குச் செல்கின்ற வனச் சாலை சுமார் 8 கி.மீ. நீளம் இருக்கும். கடந்த ஆண்டுகளில் நான் இந்த அவையில் பேசுகின்றபொழுது அந்தச் சாலையை மேம்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக் கோரிக்கையை ஏற்று, அதற்கான அனுமதி கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பியிருக்கிறார். அதற்கும் நினைவூட்டுக் கடிதம் கொடுத்து, அந்தச் சாலையையும் விரைவில் அமைத்துத் தர தக்க நடவடிக்கையை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓபனாரி–அணைக்கடவு சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு எந்தத் தடையும் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கும் நிதியிலிருந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*